In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 163/2023 | Prosecution witness P.W.8 |
| Name: Stephen Dhanraj | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 15-04-2025.

**(Accused 1 produced through V.C. A4, 6 are produced. A3, A5, A7, A8, A9 are present.)**

முதல் விசாரணை :-

நான் திண்டுக்கல், பொன்னிமாந்துரையில் வசிக்கிறேன். நான் மீன் கடையில் வேலை பார்த்து வருகிறேன். அசா7 ஐ தெரியும். சம்பவத்தில் இறந்துபோன பட்டறை சரவணனை தெரியும். 20.07.2023 ம் தேதி இரவு 8, 8.30 மணியளவில் பழனி ரோட்டில் உள்ள பழனிச்சாமி டீக்கடையில் நானும் எனது நண்பர் செந்தில்பாண்டியும் டீ குடித்துக்கொண்டு இருந்தோம். அப்போது எனது நண்பர் பட்டரை சரவணனை கொலை செய்துவிட்டதாகச் சொன்னார்கள். அதை கேள்விப்பட்டு நானும் செந்தில்பாண்டியும் திண்டுக்கல் அரசு மருத்துவமனை சென்றோம். அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க இரண்டு கையெழுத்து போட்டேன். என்னுடன் செந்தில்பாண்டியும் கையெழுத்து போட்டார். சம்பவ இடத்தில் வரைபடம் வந்ததாகச்சொல்லி எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். அந்த கையெழுத்துக்கள் மட்டும் முறையே அதசாஆ.4 மற்றும் 5. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

போலீசார் என்னை விசாரித்தபோது, எனது நண்பர் சரவணக்குமார் என்ற பட்டறை சரவணனை யாரோ 20.07.2023ம் தேதி கொலை செய்துவிட்டதாக கேள்விப்பட்டு நானும் என் நண்பர் செந்தில்பாண்டியும் இரவு சுமார் 12.30 மணியளவில் சம்பவ இடம் வந்தோம் என்றும், அங்கு இருந்த போலீசார் பெரிய டார்ச் லைட் உதவியுடன் எங்கள் இருவர் முன்னிலையிலும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் பின்னர் அதிகாலை 01.45 மணியளவில் சம்பவ இடத்தில் கிடந்த ரத்தக்கறையை கம்பியால் குத்தி பெயர்த்தெடுத்து கல் மற்றும் தார் கலந்த துகள் சிறிதளவு, ரத்தம் படாத இடத்தை பெயர்த்து எடுத்த துகளையும், அங்கு கிடந்த TN11–AB 2652 Honda DIO கருப்பு கலர் மற்றும் மஞ்சள் கலர் கலந்த பைக்கையும் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும் அதில் நானும் செந்தில்பாண்டியும் கையெழுத்து செய்தோம் என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தற்போது எதிரிகளை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**–வழக்கறிஞர்கள் ஆஜராகி குறுக்கு விசாரணை இல்லை எனக்கூறினார்கள்.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.15 15:56:59 +0530

Principal District Judge,
Dindigul.